## இயல் - 8 துணைப்பாடம்

## இராமானுஜர்

**முன்னுரை:**

நாளுக்கு ஒருமுறை மலர்வது சண்பகம். ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது பிரம்ம கமலம். பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது மூங்கில். அதுபோல நம் தலைமுறைக்கு ஒருமுறை பிறப்பவர்கள் ஞானிகள்.அத்தகைய வரிசையில் வந்தவரே, இராமானுஜர். இவரின் அருள் உள்ளம் பற்றி இக் கட்டுரையில் காண்போம்.

**பூரணரைச் சந்தித்தல்:**

இராமானுஜர் புனிதத் திருமந்திரத் திருவருள் வேண்டி,கூரேசர், முதலியாண்டாருடன் பூரணரின் இல்லம் செல்கிறார்.பூரணர், இராமானுஜரை நோக்கி உங்களைத்தானே தண்டு கொடியுடன் வரச் சொன்னேன்;ஏன் உறவுகளை எல்லாம் அழைத்து வந்துள்ளீர்கள் எனக் கேட்டார். அதற்கு இராமானுஜர் இவர்களும் தண்டு,கொடிக்கு இணையானவர்கள்.இவர்களுக்கும் திருமந்திரம் அருளத் திருவருள் வேண்டும் எனப் பணிந்து வேண்டினார்.

**மறைபொருள் அறிதல்:**

இராமானுஜரின் கோரிக்கையை ஏற்று, மூவரையும் இருக்கையில் அமரச் செய்து “ திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன்; திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்”, என்ற மறைபொருளை மூன்றுமுறை உச்சரிக்க அறிவுறுத்தினார்.பின், இதனை யாருக்கும் அருள்விக்கக் கூடாது, அவ்வாறு மீறினால் நரகத்திற்கு இடர்ப்படுவீர் எனவும் எச்சரித்தார்.அப்படியே ஆகட்டும் என அவரை வணங்கி விடைபெற்றனர்.

**அருமருந்தான திருமந்திரம்:**

திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவில் மதில் சுவரின் மேல் இராமானுஜர் நின்று கொண்டு உரத்த குரலில், பொதுமக்களே! உங்களின் பிறவிப் பிணிகளைத் தீர்க்கும் மந்திரம் ஒன்றைக் கூறப்

போகிறேன் வாருங்கள்! எனக்கூறி அருமருந்தான திருமந்திரத்தை அனைவருக்கும் அருள்வித்தார்.அவர் சொல்லச் சொல்ல அனைவரும் உரத்த குரலில் மூன்றுமுறை கூறினார்கள். பின்னர், இறைவனை நோக்கி, “எம்பெருமானே! நான் இன்று உளம் மகிழ்கிறேன், உன் எளிய மக்களுக்குப் பிறவிப் பிணியைத் தீர்க்கும் திருமந்திரத்தைக் கூறி அவர்களை உன் திருவடிகளில் அடைக்கலமாகப் பெறச் செய்து விட்டேன்” என்றார்.

**பூரணர் அழைத்தல்:**

பூரணர், இராமானுஜரை நோக்கி,”என் வார்த்தையை மீறிவிட்டீர்” இதனால் கொடிய நரகம் கிட்டும் என்பதை அறிந்தும் ஏன் செய்தீர்கள்? என்றார். ஞானகுருவே முதலில் என்னை மன்னித்தருள்க! கிடைப்பதற்கரிய மந்திரத்தை எனக்களித்தீர் இப்பயன் எனக்கு மட்டுமே கிட்டும், ஆனால் இப்போது மக்கள் அனைவருக்கும் இதனால் நலம் கிட்டும் அல்லவா? நான் மட்டுமே நரகம் செல்வேன் என்று விளக்கினார்

**குருவின் ஆசி:**

இராமானுஜரின் பரந்த மனத்தைக் கண்ட குரு பூரணர், இறைவனின் திரு உள்ளத்தை உலகிற்கு உணர்த்தியதால் ‘எம்பெருமான்’ என்ற திருநாமத்துடன் நீடூழி வாழ்க என்று வாழ்த்தினார். மேலும் தன் மகன் சௌம்ய நாராயணனை இராமானுஜரிடம் அடைக்கலமாக அளித்தார்.

**முடிவுரை**;

‘யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’- என்ற உயரிய மந்திரத்தை வாழ்வாக்கியவர் இராமானுஜர். தனக்கென வாழாது பிறர் நலனுக்காக நரகமும் செல்ல முன்வந்த பெருமனார் இராமானுஜர்.

**இயல் - 9 துணைப்பாடம். ஒருவன் இருக்கிறான்**

**முன்னுரை:**

ஒருவன் இருக்கிறான் என்ற கதை ‘கு. அழகிரிசாமி சிறுகதைகள்’ என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. துணை இல்லாமல் வாழும் நிலை இரங்கத்தக்கது. எப்படிப்பட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்தத் துணைதான் மனிதத்தின்

வேருக்கு நீர். அதில்தான் மனிதம் துளிர்க்கும். மனிதன் துளிர்த்த கதையினை இக்கட்டுரையில் காண்போம்.

**யார்நீ?**

கதாசிரியர் ஆபிசிலிருந்து வீட்டுக்கு வரும்போது அவரது வீட்டுத் திண்ணயில் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஓர் இளைஞனைக் கண்டார். அழுக்குப்படிந்த சட்டை, வேட்டியுடன் அமர்ந்திருந்த அவனைப் பார்த்து "யாரப்பா நீ? எங்கு வந்தே? என்றார்.அதற்கு ஆசிரியரின் மனைவி, பக்கத்து வீட்டு அம்மாவுக்கு அக்கா மகன். வயிற்று வலிக்கு வைத்தியம் பார்க்கக் காஞ்சிபுரத்திலிருந்து வந்திருக்கிறான் என்றாள். பக்கத்து வீட்டுக்காரன் தங்கவேலு, அந்த வயிற்று வலிக்காரனை அழைத்துக் கொண்டு பொதுவாக உள்ள சிமெண்டு நடைபாதையில் படுக்க வைத்தார். இது ஆசிரியருக்குப் பிடிக்காமல் மனைவியிடம் கூறினார். மனைவியும் " பாவம்! நோயாளியாக இருக்கிறான்; கிடந்துட்டுப் போகட்டும் என்றாள்.

**தீராத வயிற்றுவலி**:

தங்கவேலு, ஆசிரியரிடம், இவன் என் மனைவியின் அக்கா மகன். தாய் தகப்பன் கிடையாது. தீராத வயிற்று வலியால் வேலை இல்லை, சம்பாத்தியம் இல்லை என்பதால் தாய்மாமன் வீட்டிலிருந்து விரட்டி விட்டார்கள். அதனால் சித்தியை நம்பி (என்மனைவியை) சென்னைக்கு வந்திருக்கிறான் என்றார். தங்கவேலுவின் மனைவிக்கு மட்டுமல்லாது ஆசிரியருக்கும் இது பிடிக்கவில்லை.

**நல்லயோசனை:**

ஒவ்வொரு நாளும் அந்த வாலிபன் வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்ததால் அவனை அரசு ஆஸ்பத்திரியில் சேர்க்கப் போவதாக தங்கவேலு கூறியதும் ஆசிரியருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. தொலைகிற பீடை சீக்கிரமாகத் தொலையட்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டார். பின்பு தங்கவேலுவிடம், 'நல்லயோசனை, அங்கு நல்லா கவனிப்பாங்க' என்று ஒப்புக்குச் சொன்னார். அந்த வாலிபனும் கை எடுத்துக் கும்பிட்டுச் சென்றான். ஆசிரியரும் கடவுள் கிருபையால் சீக்கிரம் குணமாகட்டும் என்றார். இருப்பினும், நஞ்சாக வெறுத்து இப்படிப் பொய்யாக வாழ்த்தி அனுப்புவதை நினைத்து வெட்கப்பட்டு வருந்தினார்.

**இப்படி ஒரு நட்பா?**

ஒருநாள் தங்கவேலு வீட்டிற்கு ஒருவர் வந்து என் பெயர் ஆறுமுகம்! குப்புசாமி இருக்கிறாரா? என்றார். ஆசிரியரின் மனைவி அந்தப் பையனை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கு. ஏதாவது சொல்ல வேண்டுமா? என்றதும், ஆமாம்! குப்புசாமியின் நெருங்கிய நண்பன் வீரப்பன். குப்புசாமி கஷ்டப்படும் போதெல்லாம் உதவி செய்து வந்தவன். இப்பொழுது மருத்துவ உதவிக்கு இங்கு மருத்துவ உதவிக்கு இங்கு வந்ததால் என்னிடம் மூன்று ரூபாயும், ஒரு லட்டரும் கொடுத்தனுப்பிக் கொடுக்கச் சொன்னான் என்றார். இதனைக் கேட்ட ஆசிரியருக்கு, இவனுக்கு இப்படி ஒரு நட்பா? உயிருக்கு மதிப்புக் கொடுக்கிற ஆத்மாவும் உலகில் இருக்கிறாதா? என்று எண்ணி வியந்து கொண்டார். வந்தவர் இரண்டு சாத்துக்குடி பழங்களையும், ஒரு ரூபாய் நோட்டையும் நீட்டி குப்புசாமியிடம் என் சார்பாகக் கொடுத்து விடுங்கள் என்று கூறிவிட்டுக் காஞ்சிபுரம் சென்றார்.

**உயிர் நண்பன்:**

குப்புசாமியின் நண்பன் வீரப்பன் கொடுத்த கடிதத்தின் மடிப்பை ஆசிரியர் பிரித்துப் படித்தார். அதில், " என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு, நீ இங்கிருந்து போனதில் இருந்து என் உயிர் இங்கு இல்லை.உன் ஞாபகமாக இருக்கிறேன். கடவுள் அருளால் நீ சீக்கிரம் குணமாகி வரவேண்டும். வருமானம் இல்லை. ஆதலால், ஒருவரிடம் 3 ரூபாய் கடன் வாங்கி அனுப்பி உள்ளேன். உனக்குத் தக்க சமயத்தில் உதவியாக இருக்கும். சீக்கிரம் பார்க்க வருகிறேன்", என எழுதியிருந்ததை ஆசிரியர் படித்தார். ஏழைகள் எவ்வளவு பிரியமாக இருக்கிறார்கள், என்று ஆசிரியர் தன் மனைவியிடம் கூறிக் கொண்டார்.

**முடிவுரை:**

ஆசிரியர் தன் மனைவியிடம், குப்புசாமியைப் பார்க்கச் செல்வோமா? என்றதும் மனிவிக்கு ஆச்சரியத்தோடு ஆனந்தமும் கூடியது. உடனே பழங்கள் வாங்கக் கடைத்தெருவுக்குப் போனார். போகும் வழியில் வீரப்பனின் உயிர் நண்பனை புண்ணிய மூர்த்தியைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவல் கூடியது. அது மட்டுமல்லாது குப்புசாமிக்கும் ஒருவன் இருக்கிறான். குப்புசாமிக்கு மட்டுமா? எனக்குமே ஒருவனாக அவன் இருக்கிறான் என்ற மனநிறைவோடு ஆசிரியர் பழங்களை வாங்க விரைந்தார். இக்கதையின் மூலம் நாம் அறிவது, துணையின்றி யாராலும் தனித்து இயங்க இயலாது, நட்பே துணை.